



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஊத்துக்குளி வடக்கு, மத்திய ஒன்றியத்திலுள்ள கழக நிர்வாகிகளுக்கு ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் கழக கொள்கை பரப்புச் இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்டக் கழக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமரசாமி,கழக தேர்தல் பணிக்குழு உறுப்பினர் கே.பி.சாமி , வழக்கறிஞர் திருமலை, ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழக செயலாளர் குன்னத்தூர் ராஜா, பேரூர் கழக செயலாளர் சென்னியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### குஜராத்தில் குப்பைகளை எரித்து மின்சாரம் தயாரிப்பது போல்

# தஞ்சை மாநகராட்சியிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தஞ்சாவூர் மாநகராட்சிக் கூட்டத்தில்-சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வலியுறுத்தல்!

*தஞ்சாவூர், ஆக.20-*

தஞ்சாவூர் மாமன்ற கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் பேசுகையில்; மக்கள் பணியே மகேசன் பணி. நாம் அனைவரும் மக்களுக்காக பணியாற்ற வந்துள்ளோம். எம்.பி., எம்.எல்.ஏ., அமைச்சர் ஆகியோரால் கூட செய்ய முடியாத மக்கள் பணிகளை மக்களுடன் நெருங்கி இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மேற்கொண்டு சாதனை படைக்க முடியும். ஏனெனில் நானும் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பு வகித்து பணியாற்றி உள்ளேன்.

ரூ.ஆயிரம் கோடி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நிதி பெற்று உள்ள மாநகராட்சியே இப்படி இருக்கிறது என்றால் எந்த நிதி உதவியும் பெறாத மாநகராட்சி எப்படி இருக்கும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். நான் இந்த கூட்டத்தை கவனித்த போது விந்தையாக உள்ளது. தீர்மானங்கள் அனைத்தும் ஒப்பந்த பணியாகவே உள்ளது. சென்ற கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகள், எழுப்பிய கேள்விகள் இந்த தீர்மானத்தில் கொண்டு வந்து அதற்காக காணப்பட்ட தீர்வு, நடவடிக்கை குறித்து குறிப்பிடப்பட வேண்டும். உறுப்பினர்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தங்களது கோரிக்கையை மனுவாக அளித்தால் அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அதற்குரிய பதிலை விளக்கமாக அளிக்க ஏதுவாக இருக்கும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.



மாநகராட்சி வரவுகளையும் செலவுகளையும் உறுப்பினர்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். மாமன்ற உறுப்பினர்கள் பிறருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். ஆலோசனை கூறுவது அதிகாரிகளின் பணி. ஆனால் அதை முடிவெடுத்து செயல்பாட்டுக்கு கொண்டு வருவது மாமன்ற உறுப்பினர்கள். மாமன்ற உறுப்பினர்கள் அனுமதித்தால் மட்டுமே எந்த பணியும் நடக்கும். அவ் வாறு இருக்கையில் மாமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்தில் ஒரு பொருள் வைக்கும் போது அதை குறித்து முழுமையான புரிதல் இருக்க வேண்டும்.

அப்போது தான் அதை அனுமதிப்பதா, இல்லையா என்பதை முடிவு செய்ய முடியும், குஜராத்தில் கிராம ஊராட்சியில் குப்பைகளை எரித்து மின்சா ரம் தயாரித்து அதை அரசுக்கு விற்பனை செய்கிறார்கள். அது போல் நமது மாநகராட்சியிலும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

இவ்வாறு தஞ்சை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி உரையாற்றினார்.

# எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார்!

# சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கு முதலமைச்சரைக் காணோம்!

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்றீர்கள்... இன்று “சட்ட ஒழுங்கு அமைச்சரை காணோம்”

தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு தீர்வுகளும், ஆளும் தலைமையின் பொறுப்பற்ற தன்மையும்

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று சில மாதங்களுக்கு முன்பு எதிர்க்கட்சிகளை பார்து நக்கலாக பேசினீர்களே முதல்வர் அவர்களே!!!

இன்று சட்டமன்றத்தில் மிக முக்கியமான “சட்ட ஒழுங்கு” துறை குறித்த விவாதம் நடைபெறுகிறது என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த துறையின் அமைச்சரும், மாநிலத்தின் முதல்வருமான நீங்களே இன்று சட்டசபையில் காணவில்லை.

அப்போ கேட்டீர்கள் “அப்பாவை காணோம்”. இன்று மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டியவரை காணோம்”.

பேச்சுக்கு பதில் சொல்ல பயமா? கேள்விகளுக்கு பதில் தர முடியாதா? இல்லை பொறுப்பை தட்டி கழிக்கிறீர்களா?

தமிழ்நாட்டின் எதிர்கட்சித் தலைவரும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமுமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் ஆளும் விஜய்அரசை பார்த்து அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வருகிறார்.

போதை, சட்ட ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு என ஒவ்வொரு துறையாக புள்ளி விவரத்துடன் கேள்வி கேட்டு முதலமைச்சரையும் அமைச்சர்களையும் திக்கு முக்காட வைக்கிறார்.

மக்களின் குரலாக ஒலிக்கும் அவரின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஆளுங்கட்சி திணறி வருகிறது. உதயநிதி அவர்களின் ஆக்ரோஷமான எதிர்கட்சி பணி தமிழ்நாட்டு மக்களின் பாராட்டை பெற்று வருகிறது.

கடந்த கால திமுக ஆட்சியை குறை சொல்ல எந்த வித அருகதையும் அற்றவர்கள்

5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் - முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகள்

**1. Supply Control**

- 107 டன்+ கஞ்சா பறிமுதல்: 2021 முதல் 2025 வரை 107 டன்களுக்கு மேல் கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளது
- 8,949 வங்கி கணக்குகள் முடக்கம்: போதை கடத்தல் தொடர்பான 8,949 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டன
- 45 சொத்துகள் பறிமுதல்: 21 கோடி மதிப்புள்ள 45 சொத்துகள் பறிக்கப்பட்டன.

**2. தடுப்பு & விழிப்புணர்வு**

- ‘எனக்கு வேண்டாம், நமக்கு வேண்டாம்’ இயக்கம்: 74 லட்சம் மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி

**3. தண்டனை & தடுப்புக் காவல்**

- குற்றத்தீர்ப்பு 88%: 2025 ஜூன் வரை 4,889 வழக்குகளில் 3,493 குற்றத்தீர்ப்பு
- குண்டர் சட்டம்: ஆயிரக்கணக்கான பழக்கமான கஞ்சா விற்பவர்கள் குண்டர் சட்டத்தில் கைது
- தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு இன்று எந்த நிலையில்?

1. போதை மற்றும் கஞ்சா மாஃபியா
   பள்ளி, கல்லூரி வாசலிலேயே கஞ்சா பொட்டலம் விற்கப்படுகிறது.
2. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கேள்விக்குறி
   பாலியல் வன்கொடுமை, கடத்தல் அதிகரித்துள்ளது.
3. கொலை, கொள்ளை, வழிப்பறி
   பட்டப்பகலில் செயின் பறிப்பு சர்வ சாதாரணம்.



**சைதை சாதிக்**
(கழக செய்தித் தொடர்பாளர்)

4. அரசியல் வன்முறை
   கட்சி பெயரை சொல்லி மிரட்டுவது அதிகமாகிவிட்டது.
5. சைபர் குற்றம் மற்றும் நிதி மோசடி
   முதியவர்கள், பெண்கள் லட்சக்கணக்கில் ஏமாற்றப்படுகிறார்கள்.

முதல்வர் அவர்களே, எதிர்க்கட்சியை கிண்டல் செய்வது அரசியல். ஆனால் மக்கள் கொடுத்த பொறுப்பில் இருந்து ஓடி ஒளிவது அல்ல.

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று நீங்கள் கேட்டீர்கள்.

இன்று தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டிய முதல்வரை காணோம்”.

பேச்சு வீரம் மட்டும் போதாது. பொறுப்புடன் சபையில் அமர்ந்து பதில் சொல்லுங்கள்.

இல்லையென்றால் நாளை “தமிழ்நாட்டில் சட்டமே இல்லை” என்ற நிலை வந்துவிடும்.

ஆட்சி என்பது நாற்காலி அல்ல, அது பொறுப்பு.

# நியாயவிலைக் கடைகளில் கைரேகைப் பதிவில் குளறுபடி!

## மக்கள் அவதி!

*சேலம்,ஆக.20-*

த.வெ.க. ஆட்சியில் பொது மக்கள் ரேஷன் பொருட்கள் வாங்க முடியாமல் திணறல்.

சேலம் மாவட்டத்தில் 1700-க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள்உள்ளன. இங்கு பயோ மெட்ரிக் மிஷின் மூலம் ஸ்மார்ட் கார்டு ஸ்கேன் செய்து விரல் ரேகை பதிவு செய்த பின்பு அரிசி பருப்பு சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாக அடிக்கடி ஏற்படும் சர்வர் பிரச்சினையால் கடைக்கு வரும் பொது மக்களிடம் நீண்ட நேரம் காத்திருந்தவர்களை பொருட்கள் வழங்காமல் திருப்பி அனுப்பிவரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த ரேஷன் பொருட்களை அரிசி பருப்பு சர்க்கரை போன்ற பொருட்கள் நம்பி வாழ்கின்ற மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இது த.வெ.க. ஆட்சின் மாற்றம் விசிலுக்கு வாக்களித்து வெறும் வயிற்றில் வாழும் நிலை ஏற்பட்டு விட்டது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அ. இரகுமான்கான்

## ஆகஸ்ட் 20 (2020)



மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.

மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருதினை’ முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சேலம் தனியார் குடிநீர் வழங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்யவில்லையேல்

# தலைமைச் செயலகம் கோட்டை முன்பு உண்ணாவிரதம்!

## மேயர் ராமச்சந்திரன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு!

*சேலம், ஆக.20-*

சேலம் மாநகராட்சி பகுதிகளில் சூயஸ் என்ற தனியார் நிறுவனம் குடிநீர் வழங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதை ஏற்கெனவே சேலம் மாநகராட்சி மன்ற கூட்டத்தில் தனியாருக்கு சேலம் மாநகராட்சி பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய கோரி ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றி அரசுக்கு அனுப்பியது.

இந்த நிலையில் மாமன்ற தீர்மானத்தை அரசு மதித்து தனியார் குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்திருக்க வேண்டும்.

ஆனால் ரத்து செய்யாத காரணத்தால் சேலம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் சிறப்பு கூட்டம் மேயர் ஆ.ராமச் சந்திரன் தலைமையயில் நடைபெற்றதில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் சென்னைக்கு 24ம் தேதி சென்று முதலமைச்சரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்து சேலம் மாநகராட்சி பகுதிகளுக்கு தனியார் குடிநீர் வழங்கும் உத்திரவை ரத்து செய்ய கோரி கூறுவது ரத்து செய்யவில்லையானால் கோட்டையில் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளார்கள்.



ஈரோடு வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.வெள்ளிங்கிரி தந்தை சிறுவலூர் ஏ.சண்முகம் மறைவு மாவட்ட கழக செயலாளர் என். நல்லசிவம் நேரில் அஞ்சலி.ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தெற்கு ஒன்றியத்திலுள்ள பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். வெள்ளிங்கிரி தந்தை சிறுவலூர் ஏ.சண்முகம் (18.8.2026) செவ்வாய்க்கிழமை அன்று காலை இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.அன்னாரின் மறைவு செய்தியறிந்தமாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.மேலும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.